අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. : ED/01/12/15/02/04

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. :

දිනය / திகதி / Date : 2018.02.16

சுற்றுநிருப இல :- 03/2018

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக்கல்வி பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்களுக்கும்.

**தரம் 02 – 11 வரை மாணவர்களை அனுமதித்தல் தொடர்பில் வெளியிடப்பட்ட 2008/37 சுற்று நிருபத்தில் தரம் 06 இற்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பிலான திருத்தம்.**

தரம் 02 – 11 வரை மாணவர்களை அனுமதித்தல் தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட 2008.09.19 ஆம் திகதியிடப்பட்ட 2008/37 இலக்க சுற்று நிருபத்திற்கு மேலதிகமாக தரம் 6 இற்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட 2008.10.30 ஆம் திகதியிடப்பட்ட 2008/37(I) சுற்றுநிருபம் இரத்துச் செய்யப்படுவதுடன் எதிர்வரும் காலங்களில் 2008/37 சுற்றுநிருபத்துடன் திருத்தம் செய்யப்பட்ட இந்தச் சுற்றுநிருபமே நடைமுறைப் படுத்தப்படும்.

2008/37 சுற்ற நிருபத்தில் இல 4.0 இன் கீழே வரும் 06 ஆம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் தொடர்பிலுள்ள ஆலோசனைகளுக்கு மேலதிகமாக 4.8 மற்றும் 4.9 எனும் கீழ்வரும் திருத்தப்பட்ட உபபிரிவுகளும் உள்ளடக்கப்படுகின்றது.

4.8 அ. ஆரம்பப் பிரிவு இல்லாத மற்றும் ஊட்டப்பாடசாலைகள் இல்லாத போது பழைய மாணவ/ மாணவிகளின் பிள்ளைகள், அந்தப் பாடசாலையில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர சகோதரிகள், மற்றும் பாடசாலை அமைந்துள்ள கல்வி வலயத்தில் பாடசாலைக் கல்வியில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் நிறுவனங்களில் பணியாற்றும் கல்விசார் ஊளியர்களின் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை அளிக்கும் வகையில் மூன்று குழுக்களுக்கும் அனுசரணையாக பாடசாலையின் தரம் 06 வெற்றிடங்களில் 15% வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழுக்களுக்கும் உரிய சதவீதம் கீழ்வருமாறு அமைதல் வேண்டும்.

| தொடர் இல | விபரம் | வீதம் |
|---|---|---|
| 01. | பழைய மாணவர் | 7.5% |
| 02. | சகோதரர்கள் | 5% |
| 03. | வலயத்தினுள் பணிபுரியும் கல்விசார் ஊழியர்களின் பிள்ளைகள் | 2.5% |

ஆ. விண்ணப்பிக்கும் பாடசாலையானது தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் பாடசாலையாயின் மேலுள்ள சலுகைகளுக்காக விண்ணப்பிக்கும் மாணவ/ மாணவி தான் கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தின் சித்திப்புள்ளியினை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளியினைப் பெற்றிருக்க வேண்டும்.

இ. எனினும் விண்ணப்பிக்கும் பாடசாலைக்கான மாவட்ட வெட்டுப் புள்ளியைவிட உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் விண்ணப்பம்/ மேன்முறையீடுகள் இல்லாதபோது மாத்திரம் குறித்த சலுகைகளுக்கு அமைய பாடசாலையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப மேற்கூறிய மூன்று பிரிவுகளிலும் மாவட்டத்திற்கான சித்திப்புள்ளியைப் பெற்றிராத மாணவர்கள் தொடர்பாக மேற் குறித்த புள்ளி அடிப்படையில் கருத்திற் கொள்ள இயலும்.

4.9. இந்த 15% கோட்டாவைப் பெற்றுக் கொள்ள தகுதியான மாணவர்களின் பெற்றோர்களால் உரிய பாடசாலைக்குச் சேர்க்கும் முகமாக தரம் 05 புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி வெளியிடப்பட்டு ஒரு மாதத்தினுள் உரிய அதிபர்களுக்கு பதிவுத்தபாலில் விண்ணப்பிக்க வேண்டும். அதிபர்கள் தமது பாடசாலைக்குக் கிடைத்த விண்ணப்பங்களை புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் சுற்றுநிருப இல2008/37 இன் பிரிவு 4.7 இல் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கிணங்க ஆவனங்களைத் தயாரித்து அதன் இரு பிரதிகளை கல்வி அமைச்சின் பாடசாலைகள் செயற்பாட்டுக் கிளைப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இதன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் பாடசாலைகள் செயற்பாட்டுக்கிளையின் பணிப்பாளரினால் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

2008/37 சுற்று நிருப இல 4.8 எனக் குறிப்பிடப் பட்டுள்ள உபபிரிவு 4.10 ஆக கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். மேற்குறித்த திருத்தங்கள் தவிர்ந்த ஏனைய சகல ஆலோசனைகளும் 2008/37 இலக்க சுற்றுநிருபத்திற்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

சுனில் ஹெட்டிஆரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள்:

01. தேசிய கல்வி ஆணைக்குளுத் தலைவர்.
02. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்.
03. பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத்திணைக்களம்
04. கல்வி வெளியிட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
05. கணக்காய்வாளர் நாயகம்.
06. கல்வி அமைச்சின் பதவி நிலை உத்தியோகத்தர்கள்
07. கல்வி அமைச்சின கிளைத் தலைவர்கள்.